# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் பிப்ரவரி மாத அவசரக்கூட்டம் 12.02.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சியில் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை கீழ்கண்டவாறு உயர்வு செய்து குடிநீர் வினியோக உபவிதிகளில் திருத்தம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்கள் ந.க.எண்.10049/2019/குவ3, நாள் 05.02.2021 மூலம் பொது அங்கீகாரம் (General Approval) வழங்கி உள்ளார் என்ற விவரத்தை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட விவரத்தை அரசிதழில் பிரசுரம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குடிநீர் பயன்பாடு விவரம் | தற்போது உன்ன கட்டணம் | | உயர்த்தப்பட்டுள்ள கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | மாதம் ஒன்றுக்கு குடிநீர் கட்டணம் | வைப்புத் தொகை | மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச குடிநீர் கட்டணம் | வைப்புத் தொகை |
| 1. | வீட்டு பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 1000 லிட்டருக்கு ரூ.5.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.50/- | 2000/- | 1000 லிட்டருக்கு ரூ.15.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.150/- | 5000/- |
| 2. | வீடு உபயோகமில்லாத பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 1000 லிட்டருக்கு ரூ.12.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.120/- | 5000/- | 1000 லிட்டருக்கு ரூ.36.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.360/- | 10,000/- |
| 3. | வணிக பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு | 1000 லிட்டருக்கு ரூ.18.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.180/- | 7000/- | 1000 லிட்டருக்கு ரூ.54.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.540/- | 15,000/- |

ந.க.எண்.இ2/256/2020

**தீர்மானம் எண்.2455 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் களப்பணியாளர்களை தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்வதற்கு திருநெல்வேலி மண்டல அளவில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (ம) மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு டைம்ஸ் ஆப் இந்தியா (ம) புரட்சி தலைவி நமது அம்மா (தமிழ்நாடு பதிப்பு) நாளிதழ்களில் 18.08.2020 (ம) 08.09.2020 ஆகிய தேதிகளில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு இந்நகராட்சிக்கான பங்குத்தொகை ரூ.4453/- செலுத்தக்கோரி கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் கடிதம் ந.க.எண்.4686/2020/எச்1 நாள் 07.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகராட்சி பங்குத்தொகை ரூ.4453/- னை கடையநல்லூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உத்தரவின்படி செலுத்தியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1710/2017/எச்1

**தீர்மானம் எண்.2456 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.298, நாள் 02.09.2020-ன் படி இயற்கை பேரிடர் நிவாரண கொரோனா நோய் தடுப்பு பணிகள் (COVID-19) பொது ஊரடங்கு காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரையுள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் பிற இனங்களான கடைகளின் வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.8763/2020/அ2 நாள் 29.09.2020-ன் படி, மேற்படி இரண்டு மாதங்களுக்கு வாடகை தொகை கேட்பினை தள்ளுபடி செய்வதற்கு அலுவலக குழு அமைக்கப்பட்டு, மேற்படி குழு கீழ்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே கீழ்காணும் பட்டியலில் உள்ள கடைகள் மற்றும் ஆண்டு குத்தகைகளுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான இரண்டு மாதங்களுக்கு வாடகை தொகை கேட்பினை தள்ளுபடி செய்யவும், மேற்படி இரண்டு மாதங்களுக்கான கேட்பினை கணணியிலிருந்து நீக்கம் செய்திட இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2396 நாள் 29.10.2020-ன் படி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் ஆண்டு குத்தகை மற்றும் பிற இனங்களுக்கான மாதவாடகையுடன் சேர்த்து ஜி.எஸ்.டி சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குத்தகை இனங்களுக்குரிய ஜி.எஸ்.டி-ஐ தவிர்த்து ஆண்டு குத்தகை 5 இனங்கள் ரூ.131170/- மற்றும் பிற குத்தகை இனங்கள் 114 கடைகளுக்கான மாத வாடகை ரூ.1070719/- மேலும் 5 அரசு நிறுவன கடைகளுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான 2 மாத வாடகை தொகை ரூ.50,720/-ம் மொத்தம் சேர்த்து ரூ.12,52,609/-ஐ கணணியில் வரி செலுத்திய வரிவிதிப்பாளர்களுக்கு அடுத்த இரண்டு மாதத்தற்கு ஈடு செய்யவும், வரி செலுத்தாதவர்களுக்கு இரண்டு மாத வாடகை நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | ஏப்ரல் மாத குத்தகை | மே மாத குத்தகை |
|---|---|---|---|---|---|
| 1 | 148/2018001 | கடை | ஜெகதீஷ் | 11300 | 11300 |
| 2 | 148/2018003 | கடை | .அகமது கபீர் | 15000 | 15000 |
| 3 | 148/2018004 | கடை | ராமகிருஷ்ணன் | 10000 | 10000 |
| 4 | 148/2018005 | கடை | மரிய ஜெரோம் | 9000 | 9000 |
| 5 | 148/2018006 | கடை | கென்னடி | 5100 | 5100 |
| 6 | 148/20050300 | கடை | காதி கிராப்ட் | 3045 | 3045 |
| 7 | 148/2018008 | கடை | முகம்மது மிக்தாத் | 5100 | 5100 |
| 8 | 148/2018010 | கடை | ராபி சுந்தர் சிங் | 4000 | 4000 |
| 9 | 148/2018011 | கடை | ஐரின் விஜயகுமார் | 4000 | 4000 |
| 10 | 148/2018012 | கடை | ஐரின் விஜயகுமார் | 4000 | 4000 |
| 11 | 148/2018013 | கடை | ஜெகன் | 4000 | 4000 |
| 12 | 148/2018014 | கடை | ஹெலன் | 4000 | 4000 |
| 13 | 148/2018015 | கடை | பட்ட முத்து | 4000 | 4000 |
| 14 | 148/2018016 | கடை | ரெஜினி குமார் | 3000 | 3000 |
| 15 | 148/2018019 | கடை | பிரவின் | 2500 | 2500 |
| 16 | 148/2018020 | கடை | கிறிஸ்டல் மோகன் | 2500 | 2500 |
| 17 | 148/2018021 | கடை | கிறிஸ்டல் மோகன் | 2500 | 2500 |
| 18 | 148/2018028 | கடை | ராதாகிருஷ்ணன் | 3000 | 3000 |
| 19 | 148/2018029 | கடை | ஜாண்சன் | 4000 | 4000 |
| 20 | 148/2018030 | கடை | சுஜாதா ராமகிருஷ்ணன் | 4100 | 4100 |
| 21 | 148/2018031 | கடை | ஜெய சோபனபாய் | 4500 | 4500 |
| 22 | 148/2018032 | கடை | முகம்மது பாரூக் | 4000 | 4000 |
| 23 | 148/2018033 | கடை | முகம்மது பாரூக் | 4000 | 4000 |
| 24 | 148/2018034 | கடை | அரவிந்த் பிரசாத் | 4000 | 4000 |
| 25 | 148/2018035 | கடை | முகம்மது முசம்மில் | 12430 | 12430 |
| கருணாநிதி வணிக வளாகம் | | | | | |
| 26 | 148/2018040 | கடை | நிர்மலா | 6000 | 6000 |
| 27 | 148/2018041 | கடை | நிர்மலா | 6000 | 6000 |
| 28 | 148/2018042 | கடை | சகாய டெல்பின் | 5000 | 5000 |
| 29 | 148/2018043 | கடை | சபீக் அகம்மது | 5000 | 5000 |
| 30 | 148/2018044 | கடை | நபிஷா பீவி | 5000 | 5000 |
| 31 | 148/2018045 | கடை | முகம்மது உபைஸ் | 5000 | 5000 |
| 32 | 148/2018046 | கடை | பைசல் | 5000 | 5000 |
| 33 | 148/2018047 | கடை | பால்தாஸ் | 4000 | 4000 |
| 34 | 148/2018048 | கடை | பால்தாஸ் | 4000 | 4000 |
| 35 | 148/2018049 | கடை | அஜிதா | 3500 | 3500 |
| 36 | 148/2018050 | கடை | அஜிதா | 3500 | 3500 |
| 37 | 148/2011004 | கடை | மார்சல் பெலிக்ஸ் | 5000 | 5000 |
| 38 | 148/2018054 | கடை | அன்சார் | 4000 | 4000 |
| 39 | 148/2014001 | கடை | ஷாகுல் அமீது | 4000 | 4000 |
| 40 | 148/2018056 | கடை | சுல்பீகர் மாஹீன் | 4000 | 4000 |
| 41 | 148/2018057 | கடை | மாஹீன் அபுபக்கர் | 4000 | 4000 |
| 42 | 148/2018058 | கடை | மாஹீன் அபுபக்கர் | 4000 | 4000 |
| 43 | 148/2018059 | கடை | ஆசிர் மனோஜ் ஜாண் | 4000 | 4000 |
| 44 | 148/2011001 | கடை | தாகீர் உசேன் | 3600 | 3600 |
| 45 | 148/2011006 | கடை | மோகன்லால் பாபு | 2017 | 3500 |
| 46 | 148/2018063 | கடை | சுந்தர் | 3500 | 3500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47 | 148/2018064 | கடை | சுந்தர் | 3500 | 3500 |
| 48 | 148/2012001 | கடை | அப்துல் ரகீம் | 3600 | 3600 |
| 49 | 148/BD01/00006 | கடை | ஜாண் | 3600 | 3600 |
| 50 | 148/BD01/00003 | கடை | எம்.சித்திக் | 3600 | 3600 |
| 51 | 148/BD01/00004 | கடை | அப்துல் அசீஸ் | 3600 | 3600 |
| 52 | 148/BD01/00005 | கடை | அப்துல் அசீஸ் | 3600 | 3600 |
| 53 | 148/2018070 | கடை | சித்திக் | 6000 | 6000 |
| 54 | 148/2018071 | கடை | அமலதாஸ் | 6000 | 6000 |
| 55 | 148/2008001 | கடை | ராய் மேத்யூ | 1551 | 1784 |
| 56 | 148/2008002 | கடை | ராய் மேத்யூ | 1543 | 1774 |
| 57 | 148/2008003 | கடை | ராய் மேத்யூ | 1551 | 1784 |
| 58 | 148/2008004 | கடை | ராய் மேத்யூ | 1551 | 1784 |
| 59 | 148/2008005 | கடை | ராய் மேத்யூ | 1543 | 1774 |
| 60 | 148/2008006 | கடை | ராய் மேத்யூ | 1551 | 1784 |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்** | | | | | |
| 61 | 148/2018104 | கடை | பொன்னுமணி | 3000 | 3000 |
| 62 | 148/2018105 | கடை | பொன்னுமணி | 3000 | 3000 |
| 63 | 148/2018106 | கடை | உசேன் கான் | 3000 | 3000 |
| 64 | 148/2018107 | கடை | ஷாகுல் ஹமீது | 3000 | 3000 |
| 65 | 148/2018108 | கடை | அயூப் கான் | 3500 | 3500 |
| 66 | 148/2018109 | கடை | அயூப் கான் | 3500 | 3500 |
| 67 | 148/2018110 | கடை | முகம்மது சலாவுதீன் | 3500 | 3500 |
| 68 | 148/2018111 | கடை | முகம்மது சுலைமான் | 4000 | 4000 |
| 69 | 148/2018112 | கடை | முகம்மது சலாவுதீன் | 4000 | 4000 |
| 70 | 148/2018113 | கடை | சேகர் | 5000 | 5000 |
| 71 | 148/2018114 | கடை | சேகர் | 5000 | 5000 |
| 72 | 148/BD01/00002 | கடை | முகம்மது முசேர் | 5500 | 5500 |
| 73 | 148/2018116 | கடை | ஜாண்சன் | 5150 | 5150 |
| 74 | 148/2018117 | கடை | ஆல்பிரட் | 6000 | 6000 |
| 75 | 148/2018118 | கடை | ஜாண் நிக்சன் | 6000 | 6000 |
| 76 | 148/2018119 | கடை | ஜாண் நிக்சன் | 6000 | 6000 |
| 77 | 148/2016001 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 1150 | 1150 |
| 78 | 148/2012007 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 1323 | 1323 |
| 79 | 148/BD01/00007 | கடை | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 1150 | 1150 |
| 80 | 148/2013002 | கடை | எல்.ஐ.சி | 1323 | 1323 |
| 81 | 148/2013003 | கடை | எல்.ஐ.சி | 1323 | 1323 |
| 82 | 148/2016002 | கடை | ஷீபா | 1150 | 1150 |
| **நவீன மீன் சந்தை** | | | | | |
| 83 | 148/2017003 | கடை | ஜெசி ஜெனட் | 5700 | 5700 |
| 84 | 148/2017004 | கடை | மோகன்லால் பாபு | 5500 | 5500 |
| 85 | 148/2017006 | கடை | ஜெமிலா | 15250 | 15250 |
| 86 | 148/2018145 | கடை | பனிப்பிச்சை | 10700 | 10700 |
| 87 | 148/2017008 | கடை | சசி | 11200 | 11200 |
| 88 | 148/2017009 | கடை | கிரிஜா | 6700 | 6700 |
| 89 | 148/2017010 | கடை | ஜெயசீலன் | 6700 | 6700 |
| 90 | 148/2017012 | கடை | நாகராஜன் | 6700 | 6700 |

| டாக்டர் அம்பேத்கார் தற்காலிக கடைகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 | 148/2018159 | கடை | மனோகரன் | 7000 | 7000 |
| 92 | 148/2018160 | கடை | மனோகரன் | 7000 | 7000 |
| 93 | 148/2018161 | கடை | ஜெகதீஷ் | 7000 | 7000 |
| 94 | 148/2018162 | கடை | ராஜேஷ் | 7000 | 7000 |
| 95 | 148/2018163 | கடை | ஜாண்சன் | 7000 | 7000 |
| 96 | 148/2018164 | கடை | விஜிகுமார் | 7000 | 7000 |
| 97 | 148/2018165 | கடை | ராஜகுமார் | 6000 | 6000 |
| 98 | 148/2018166 | கடை | ஜனேசி | 6000 | 6000 |
| 99 | 148/2018167 | கடை | அகமது கபீர் | 6000 | 6000 |
| 100 | 148/2018168 | கடை | ஜசக் அந்தோணி பிச்சை | 6000 | 6000 |
| 101 | 148/2018169 | கடை | செல்வராஜ் | 6000 | 6000 |
| 102 | 148/2018170 | கடை | பிரபா | 6000 | 6000 |
| 103 | 148/2018171 | கடை | ஜெயந்தி | 5000 | 5000 |
| 104 | 148/2018172 | கடை | பால்தாஸ் | 5000 | 5000 |
| 105 | 148/2018173 | கடை | சங்கர் | 5000 | 5000 |
| 106 | 148/2018174 | கடை | ஹம்சி முகம்மது | 5000 | 5000 |
| 107 | 148/2018175 | கடை | தங்க நாடார் | 5000 | 5000 |
| 108 | 148/2018176 | கடை | குமாரதாஸ் | 5000 | 5000 |
| சொர்ண ஜெயந்தி கடைகள் | | | | | |
| 109 | 148/2018152 | கடை | மணிவண்ணன் | 1500 | 1500 |
| 110 | 148/2018153 | கடை | காஜா முகைதீன் | 2000 | 2000 |
| 111 | 148/2018154 | கடை | தாகிரா பீவி | 2000 | 2000 |
| 112 | 148/2018155 | கடை | அப்துல் கரீம் | 2000 | 2000 |
| 113 | 148/BD01/00001 | கடை | ஜெசி ஜெனட் | 7000 | 7000 |
| 114 | 148/2007063 | கடை | ஆவின் பால் | 420 | 420 |
| | | | மொத்தம் | 533921 | 536798 |

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஆண்டு குத்தகை (ரூபாயில்) | ஏப்ரல் மாத குத்தகை | மே மாத குத்தகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | தினசரி சந்தை | பி.கென்னடி 4–23எ, கண்டர்விளாகம், வாணியக்குடி அஞ்சல் | 562275 | 46856 | 46856 |
| 2 | 2 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | பி.கென்னடி 4–23எ, கண்டர்விளாகம், வாணியக்குடி அஞ்சல் | 75642 | 6304 | 6304 |
| 3 | 3 | காமராஜர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | பி.கென்னடி 4–23எ, கண்டர்விளாகம், வாணியக்குடி அஞ்சல் | 53390 | 4450 | 4450 |
| 4 | 4 | அண்ணாசிலை சமீபம் கட்டண கழிப்பிடம் | ஐயப்பன் 3–85எ, சன்னதி தெரு, குளச்சல். | 8820 | 735 | 735 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 5 | காமராஜர் பேருந்து நிலைய திரை விளம்பரம் | ஆர்.ரமேஷ் 3–83இ, கோவில் விளை, இரும்பிலி. | 86877 | 7240 | 7240 |
| | | | | **மொத்தம்** | **65585** | **65585** |

<u>அரசு நிறுவனங்கள்</u>

| வ.எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | ஏப்ரல் மாத குத்தகை | மே மாத குத்தகை |
|---|---|---|---|---|---|
| 1 | 148/2005008 | அலுவலகம் | தீயணைப்பு நிலையம் | 4653 | 4653 |
| 2 | 148/2005031 | - | தீயணைப்பு நிலைய ஊர்தி நிறுத்துமிடம் | 2960 | 2960 |
| 3 | 148/2009003 | அலுவலகம் | ஜூனியர் இஞ்சினியர் (TNEB) | 7475 | 7475 |
| 4 | 148/2009006 | அலுவலகம் | தொலைபேசி நிலையம்(BSNL) | 8547 | 8547 |
| 5 | 148/2014002 | கடை | ரேஷன் கடை | 1725 | 1725 |
| | | | **மொத்தம்** | **25360** | **25360** |

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2457 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் எண்.8,9 ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்காக பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | M/s.Mathava Motors, Christ Nagar, Main Road, Vellamadam | Rs.1,38,780/- (GST 18%) (2 வண்டிகள்) |
| 2. | M/s.Ganesh Motor Works, 6B1, Sasthancoil street, Puthukudieruppu, Nagercoil | Rs.1,47,264/- (GST 18%) (2 வண்டிகள்) |
| 3. | M/s.A.R.K Automobiles Simon Nager H3-21-2, Nagercoil. | Rs.1,50,804/- (GST 18%) (2 வண்டிகள்) |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Mathava Motors,, Vellamadam நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு

வழங்கவும்,அதற்கான செலவின தொகை ரூ.1,39,000/-க்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.924/2020/இ1

**தீர்மானம் எண்.2458 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதி குழு மானிய நிதி 2020-21 (15th CFC Tied Grant)-ன் கீழ், ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள குடிநீர் குழாய் பதித்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழின் 04.02.2021 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.17,892/-ஐ வழங்க கேட்டு, பட்டியல் எண்.NGL 2021-0020616 நாள் 04.02.2021 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை தற்போது நகராட்சி நிதியில் இருந்து வழங்கவும், பின்னர் திட்ட நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1439-1/2020/இ1

**தீர்மானம் எண்.2459 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனிகள் மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு முதல் பாலத்தன்கரை சாலை ஆகிய தெருக்களிலிருந்து வரும் மழை நீர் மற்றும் கழிவு நீர் அனைத்தும் ஆசாத் நகர் வடிகால் ஓடை வழியாக சென்று வருகிறது. ஆனால் ஆசாத் நகர் ஓடை மிகவும் குறுகலாகவும், சிறியதாகவும் உள்ளதாலும், மேற்படி தெருக்களிலிருந்து வரும் மழை நீர் மற்றும் கழிவு நீர் சீராக செல்லாமல் தேங்கும் நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, ஆசாத் நகர் ஓடையை விரிவுப்படுத்த கோரி, அனைத்து கட்சிகள் சார்பாக போராட்டம் நடத்தப்பட்டது. மேற்படி ஓடையை விரிவுபடுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு, நகராட்சியில் போதுமான நிதி இல்லாத காரணத்தால், மேற்படி பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, திட்ட நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி திட்ட நிதி பெறப்படும் வரையில், தற்காலிகமாக சுனாமி காலனிகள் மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு முதல் பாலத்தன்கரை சாலை தெருக்களிலிருந்து வரும் மழை மற்றும் கழிவு நீரை, சுனாமி காலனி - ஆசாத் நகர் சந்திப்பிலிருந்து, கொட்டில்பாடு செல்லும் வடிகால் ஓடையில் இணைத்தால், ஆசாத் நகர் ஓடையில் செல்லும் கழிவு நீரின் அளவு (Capacity) குறைய வாய்ப்புள்ளதால், பொது சுகாதார நலன் கருதி, சுனாமி காலனி முதல் கொட்டில்பாடு செல்லும் வடிகால் ஓடை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதை சீரமைத்து, இணைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், கழிவுநீரை Disposal செய்வதற்கு ஏதுவாக சாலையின் அருகில் Collection tank அமைத்து, அதிலிருந்து ஏ.வி.எம் கால்வாயின் அருகில் கழிவுநீரை விடும் வகையில் குழாய் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,60,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.309/2021/இ1

**தீர்மானம் எண்.2460 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் பள்ளி விளாகம் பகுதியில் உள்ள குறுக்கு தெரு மிகவும் குறுகலாகவும், வீடுகள் நெருக்கமாகவும் உள்ளதால், மழை மற்றும் கழிவு நீர் செல்ல வாய்ப்பில்லாமல், மழை காலங்களில் மழை நீர் தாழ்வான பகுதியில் இருக்கும் வீடுகளுக்குள் சென்று விடுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதி, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1374/2020/இ1

**தீர்மானம் எண்.2461 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சி பொறியியல் பிரிவில், குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கான ஓராண்டு அனுமதி காலம் 31.03.20231-ல் முடிவடைவதால், குடிநீர் வினியோக பணிகளின் அவசர அவசியம் கருதி, அடுத்து வரும் ஓராண்டிற்கு (01.04.2021 முதல் 31.03.2022 வரை) 5 பணியாளர்களுக்கு 312 (26 x 12) நாட்களுக்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்லைவரின் செயல்முறைகள் ந.க.எண்.9953/2020/அ1 நாள் 14.07.2020-ன் படி, 2020-21 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யபபட்டுள்ள தினக்கூலி தொகைக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.இ1/310/2021

**தீர்மானம் எண்.2462 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் அமைந்துள்ள வடிகால் ஓடைகள் சேதமடைவதால், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் இடையூறு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, அனைத்து பகுதிகளிலும் சேதமடையும் வடிகால் ஓடைகளின் பக்க சுவர், தளம், மேல்மூடி ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை

உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக 2021-2022 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1571-1/2021/இ1

**தீர்மானம் எண்.2463 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், கொசுப்புழு அதிகமாக உற்பத்தி ஆகக்கூடிய Port area மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில், கொசுப்புழு உற்பத்தி (Breeding sources) குறித்து Junior Entomologist, DDHS Office, Nagercoil அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்ட போது, கொசுப்புழு உற்பத்தி அதிகமாக உள்ளதாகவும், இந்நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு உற்பத்தியை கட்டுப்படுத்த கூடுதலாக DBC பணியாளர்களை நியமித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.257/17/J1 நாள் 23.04.2018-ல் 1 DBC பணியாளர் ஒரு வாரத்திற்கு 300 வீடுகள் பார்வையிட்டு, கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் பணியை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 6000 வீடுகளுக்கு 17 DBC பணியாளர்கள் போதியதாக இல்லாத காரணத்தால் கூடுதலாக மூன்று பணியாளர்களை பிப்ரவரி 2021 (ம) மார்ச் 2021 ஆகிய 2 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்த தொகை ரூ.300/- அடிப்படையில் தினக்கூலி (பகுதி நேர கூலி) தற்காலிகமாக மகளிர் சுயஉதவிக்குழு 3 நபர்களை நியமனம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை (3 DBC X 50 நாட்கள் = 150 நாட்கள் x ரூ.300) ரூ.45000/-க்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2464 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் பழைய மீன் விற்பனை கூடத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இரண்டு மீனவர் ஓய்வறைகளில் Sunshade காங்கிரீட் உடைந்து, அதன் பகுதிகள் துண்டுகளாக விழுந்து வருவதுடன், கம்பிகள் துருப்பிடித்து கீழே விழும் நிலையில் உள்ளது. மேலும் மேற்கூரை பகுதி மிக மோசமாக பழுதடைந்து, கம்பிகள் வெளியே தெரியும் நிலையில் உள்ளது. எனவே மீனவர்கள் வலை பின்னும் பணியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக, மீனவர்கள் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி இரண்டு மீனவர்கள் ஓய்வறைகளிலும் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,30,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.308/2021/இ1

**தீர்மானம் எண்.2465 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையம் முழுவதுமாக பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால், மேற்படி கட்டிடத்திற்கு மாற்றாக புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கு குருந்தன்கோடு, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரிடமிருந்து கடிதம் ந.க.எண்.79/2020 நாள் 15.09.2020 பெறப்பட்டது. ஆனால், புதிய கட்டிடம் கட்டுவதற்கு, நகராட்சியில் போதுமான நிதி இல்லாத காரணத்தால், குழந்தைகள் நலன் கருதி, பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,40,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1006/2020/இ1

**தீர்மானம் எண்.2466 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் பிப்ரவரி மாத சாதாரணக்கூட்டம் 25.02.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட சாலையோர தென்னை மரம் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகியவற்றிற்கு 27.01.2021, 05.02.2021 ஆகிய நாட்களில் பொது ஏலம் நடைபெற்றது. ஆனால் முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி குத்தகை இனங்களுக்கு 16.02.2021 -ல் பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் ஒரே ஒரு நபர் திரு.பி.கென்னடி என்பவர் மட்டுமே கலந்து கொண்டார். பொது ஏலத்தில் 2021-2022 ஆம் ஆண்டிற்கு குத்தகை தொகையாக ரூ.5,00,600/- & GST (18%) ரூ.90108/-ம், ஓர் ஆண்டிற்கு தொழில் வரி ரூ.2500/- மற்றும் வருமானவரி (1%) ரூ.5006/- சேர்த்து மொத்தம் ரூ.5,98,214/-க்கு ஏலக்கேள்வி மேற்படி நபர் (திரு.பி.கென்னடி) கேட்டுள்ளார். குத்தகை இனங்களுக்கு இரண்டு முறை ஏலம் நடத்தியும், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதாலும், துறைமூலம் வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாததாலும், திரு.பி.கென்னடி மூன்றாவது முறையாக ஏலத்தில் கலந்து கொண்டு கேட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் அங்கீகாரத்திற்காகவும், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சாலையோர தென்னை மரம் மகசூல் அனுபவிக்கும் உரிமத்திற்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் துறைமூலம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்.2467 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு / குடிநீர் வினியோக பிரிவு / தெரு விளக்கு பராமரிப்பு பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பழைய பொருட்களில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழின் 13.02.2021 ஆம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.10,735/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.NGL 2021-0021403 நாள் 13.02.2021 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வை.க்கப்படுகிறது.

ந.க.எண்.92-1/2021/இ1

**தீர்மானம் எண்.2468 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பயன்பாட்டிற்காக கிருமிநாசினி பொருட்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கிருமி நாசினி பொருட்கள் விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | Lysol (1 Lit) | Lemon Grass Oil (1 lit) | Bleaching powder (1 kg) | Lime powder (1 kg) |
| 1 | Sri Balaji Marketing, Dindigul | Rs.150/- + (18% GST) | Rs.2990/- + (18% GST) | Rs.54/- + +(18% GST) | Rs.13/- + +(5% GST) |
| 2 | Sri Thai Mookambika Export, pollachi | Rs.190/- + (18% GST) | Rs.3300/- + (18% GST) | Rs.65/- + +(18% GST) | Rs.19/- + +(5% GST) |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ஐ விட வரிசை எண்.1, Sri Balaji Marketing, Dindigul நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1338/2008/எச்1

**தீர்மானம் எண்.2469 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணை எண்.174/செமதொஅ/2020 நாள் 10.09.2021-ன் படி, குளச்சல் நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை நமது முரசு நாளிதழின் 31.12.2020 ஆம் தேதிய தொழில் மலர் பதிப்பில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.6300/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.273 நாள் 31.12.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2470 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

பொது சுகாதாரப்பிரிவில் 2021-22 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | செலவினம் - விபரம் | உத்தேச செலவினங்கள் |
|---|---|---|
| 1. | துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு பண்டிகை காலங்களில் ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படும் சீருடைகள் மற்றும் தையற்கூலி. | ரூ.1.00 இலட்சம் |
| 2. | துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் மற்றும் ஒளியூட்டும் ஜாக்கெட்டுகள் (Reflected jacket) | ரூ.0.50 இலட்சம் |
| 3. | துப்புரவு பணியாளர்களுக்கு தேவைப்படும் தளவாட சாமான்கள் | ரூ.3.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 4. | துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாமிற்கு தேவைப்படும் மருந்துகள் | ரூ.1.00 இலட்சம் |
| 5. | பொது சுகாதார லாரிகள் தகுதி சான்று கட்டணம் பெற (FC) வாகனத்தில் உள்ள பழுதுகள் சரி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 6. | பொது சுகாதார லாரி மற்றும் BOV வாகனங்களுக்கு டயர்டியூப், பேட்டரி உள்ளிட்ட உதிரி பாகங்கள் சரி செய்வதற்கு | ரூ.3.00 இலட்சம் |
| 7. | பொது சுகாதார லாரி மற்றும் BOV வாகனங்களில் பணி நேரத்தில் ஏற்படும் திடீர் பழுதுகளை சரி செய்வதற்கு | ரூ.5.00 இலட்சம் |
| 8. | பொது சுகாதார வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து நகராட்சி வாகனங்களுக்கும், சாலை வரி (Road Tax), இன்சூரன்ஸ் தொகை, தகுதிச்சான்று கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரி செலுத்தும் இனங்கள். | ரூ.2.00 இலட்சம் |
| 9. | பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளுதல். | ரூ.5.00 இலட்சம் |
| 10. | கொசு ஒழிப்புக்கு தேவைப்படும் பைரித்திரம், பேக் டிசைடு மற்றும் அபேட் மருந்து வாங்குதல். | ரூ.5.00 இலட்சம் |
| 11. | லார்வா - கொசு ஒழிப்பு பணி - Sprayer புதிதாக 5 வாங்குதல். | ரூ.50 ஆயிரம் |
| 12. | டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் தொற்று நோய்கள் குறித்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல், பிளக்ஸ் போர்டு அடித்தல், பிட் நோட்டீஸ் அச்சடித்து வழங்குதல பேரணி போன்ற பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.2.00 இலட்சம் |
| 13. | Fogging Machine புதிதாக வாங்குதல் | ரூ.2.00 இலட்சம் |
| 14. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் குறித்தும், சுகாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள், ஆட்டோ விளம்பரம் பிளக்ஸ், சுவர் விளம்பரம், பிட் நோட்டீஸ் அச்சடித்து வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.1.00 இலட்சம் |
| 15. | பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல். | ரூ.0.50 இலட்சம் |
| 16. | கலவை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை அவ்வப்போது JCB மற்றும் டிராக்டர் மூலம் அள்ளி சமன் செய்தல். | ரூ.2.00 இலட்சம் |
| 17. | கலவை உரக்கிடங்கில் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்க தேவைப்படும் EM Solution மற்றும் தேவையான மூலப்பொருட்கள் (உமி, தவடு, வெல்லம்) மற்றும் லெமன்கிராஸ் ஆயில் வாங்குதல். | |
| 18. | நகராட்சி பொது கழிப்பிடங்களை செப்டிக் டேங்க் லாரி மூலம் சுத்தம் செய்தல். | ரூ.1.00 இலட்சம் |
| 19. | கழிவு நீர் மற்றும் மழைநீர் செல்லும் பாலத்தின் அடைப்புகளை சரி செய்திட Air Compressor லாரி மூலம் சுத்தம் செய்தல். | ரூ.0.50 இலட்சம் |
| 20. | மழை நீர் செல்லும் வாய்க்கால்கள், பாலங்களில் உள்ள மண் அடைப்புகளை சரி செய்திட JCB மற்றும் டிராக்டர் மூலம் அப்புறப்படுத்துதல். | ரூ.1.00 இலட்சம் |
| 21. | Bio-Medical Waste collection - A septic Bio medical waste | ரூ.2.50 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | நிறுவனம் மூலம் அப்புறப்படுத்துதல் | |
| 22. | கபசுர குடிநீர், சோப் ஆயில் வாங்குதல் | ரூ.1.00 இலட்சம் |
| 23. | வீல்பீரோ பக்கெட் / SWM / Door to Door Collection பிளாஸ்டிக் கூடை வாங்குதல் (குப்பை அகற்றுதல்) | ரூ.2.00 இலட்சம் |
| 24. | Push Cart - புதியது 5 வாங்குதல் | ரூ.75 ஆயிரம் |
| 25. | பொது சுகாதாரப்பிரிவில் தொற்று நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு, வரிவசூல் பயன்பாடு, நகராட்சி விழாவிற்கு மைக்செட், ஸீபீக்கர், ஆம்பிளிபயர் உள்ளிட்ட பொருட்கள் வாங்குதல். | ரூ.75 ஆயிரம் |
| 26. | பொது சுகாதாரப்பிரிவில் 1950 முதல் 2000 ஆம் ஆண்டு வரை உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் சேதமடைந்ததை (Damage) பைண்டிங் செய்தல் | ரூ.75 ஆயிரம் |
| 27. | பொது சுகாதாரப்பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பராமரித்திட பீரோ வாங்குதல். | ரூ.20 ஆயிரம் |

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.527/2020/எச்1

**தீர்மானம் எண்.2471 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதிக்குழு மானிய நிதி (15th CFC Tied grant) : 2020-21-ன் கீழ், ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில், வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் துறைமுகத்தெரு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை 160mm PVC குடிநீர் குழாய் பதித்தல் பணிக்கு, 19.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.K.G.கிருஷ்ணதாஸ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம்<br>(ரூ.16,87,207/-) |
| 2. | திரு.P.ஜெயசந்திரன்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.16,65,627.43/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.ஜெயசந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1429-1/2020/இ1

**தீர்மானம் எண்.2472 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதிக்குழு மானிய நிதி (15th CFC Tied grant) : 2020-21-ன் கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலத்தன்கரை பகுதியில் 2 எண்ணம் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிக்கு, 19.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>(ரூ.8,77,453.40/-) |
| 2. | திரு.A.ஜேக்கப் டேனியல்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.13% அதிகம்<br>(ரூ.8,78,926/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ்,, ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1429-1/2020/இ1

**தீர்மானம் எண்.2473 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.17,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64, கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள் 25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரை தளம் கடை எண்கள் 25,32 மற்றும் நவீன மீன் சந்தை முதல்தளம் கடை எண்கள் 1,7 ஆகிய கடைகளுக்கு 25.02.2021-ல் பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் ஏல விபரம் பின்வருமாறு,

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.17**

| வ.எண் | ஏலத்தாரர் பெயர் | கடை எண் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1-க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | C.ராஜன் | 17 | 2300/- | 2300/- |

.

மேற்படி கடைக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேலும் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.17-க்கு 27.07.2020, 27.08.2020 மற்றும் 18.11.2020 ஆகிய தேதிகளில் ஏலம் நடைப்பெற்றதில் முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

கலம் (5)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும், ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் விடவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2474 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 24 வார்டுகளுக்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை ஆகியவற்றிற்கு நிலுவைத் தொகை வைத்திருப்பவர்களுக்கு இறுதி அறிவிப்பு நோட்டீஸ் வழங்குவதற்கு வசதியாக தாசன் அச்சகத்தில் அறிவிப்பு நோட்டீஸ் 2000-ம் அச்சடித்த வகையில் ரு.1900/- மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.4826/212/அ1

**தீர்மானம் எண்.2475 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.6-க்கு குத்தகை காலம் 01.08.2017 முதல் 31.07.2020 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்கான குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- 19.02.2021-ல் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைக்கு 01.08.2020 முதல் 31.07.2023 வரை குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விவரப்படி குத்தகை தொகை உயர்வு செய்ய மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | மாத வாடகை (மாதம் 1-க்கு) | 15% உயர்வு செய்த வாடகை | வரிஉயர்வு செய்யப்பட்ட பின்னர் மாதவாடகை (மாதம் 1-க்கு ஜி.எஸ்.டி தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1 | முதல் தளம் 6 | 148/2017010 | ஜெயசீலன் | 6700/- | 1005/- | 7705/- |

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2476 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்கள் 20 நபர்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2022 வரை ஒரு வருடத்திற்கு தினக்கூலி தொகை கீழ்க்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | DBC பணியாளர்களின் எண்ணிக்கை | - | 20 |
| 2 | ஒரு நாளைக்கு தினக்கூலி ஊதியம் | - | ரூ.400/- |

| | | | |
|---|---|---|---|
| 3 | 20 DBC பணியாளர்களுக்கான 01.04.2021 முதல் 31.03.2022 வரை | - | (20 x 365 நாட்கள் X ஊதியம் - ரூ.400/-) |
| 4 | EPF நகராட்சி பங்கு தொகை | - | 13.61%<br>= 29,20,000 X 13.61<br>= ரூ.397412/- |
| | ஒரு வருடத்திற்கான மொத்தம் தொகை | - | ரூ.33,17,412/- |

மேற்படி மதிப்பீட்டுத் தொகை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.2571/2017/J1 நாள் 23.04.2018-ன் படியும், மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அடிப்படையிலும் DBC பணியாளர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2477 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு மார்ச் 2020 முதல் ஜனவரி 2021 முடிய நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகையும், உணவுகள் விற்பனை செய்யப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | மாதம் | வரவு விபரம் | செலவு விபரம் |
|---|---|---|---|
| 1 | மார்ச் 2020 | 67100/- | 255321/- |
| 2 | ஏப்ரல் 2020 | 36300/- | 419534/- |
| 3 | மே 2020 | 13875/- | 422621/- |
| 4 | ஜுன் 2020 | 60330/- | 153814/- |
| 5 | ஜுலை 2020 | 23831/- | 153206/- |
| 6 | ஆகஸ்ட் 2020 | 28634/- | 209233/- |
| 7 | செப்டம்பர் 2020 | 44610/- | 257043/- |
| 8 | அக்டோபர் 2020 | 46970/- | 161022/- |
| 9 | நவம்பர் 2020 | 46800/- | 239196/- |
| 10 | டிசம்பர் 2020 | 47250/- | 245567/- |
| 11 | ஜனவரி 2020 | 47900/- | 200342/- |

மேற்படி அம்மா உணவகத்திற்கு கொரோனா அரசு மானியமாக ரூ.2,00,000/- மற்றும் தனி நபர் மூலம் பங்கு தொகையாக ரூ.2,00,000/- பெறப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2478 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு 2021-2022 ஆம் நிதி ஆண்டிற்கு தேவையான சமையல் பொருட்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | செலவினங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | அம்மா உணவக பணியாளர்களின் ஊதியம் | 9,25,000/- |
| 2. | மளிகை பொருட்கள் | 12,00,000/- |
| 3. | காய்கறிகள் | 7,00,000/- |
| 4. | சிலிண்டர் எரிவாயு | 4,00,000/- |
| 5. | ஆவின்பால் | 1,50,000/- |
| 6. | அரிசி | 25,000/- |
| 7. | இதர செலவினம் | 1,00,000/- |
| | **மொத்தம்** | **35,00,000/-** |

மேற்படி உத்தேச செலவினம் ரூ.35,00,000/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2479 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு ஒரு நாளைக்கு தேவையான பொருட்கள் போக மீதமுள்ள பால், காய்கறிகள் போன்ற பொருட்களை பதப்படுத்துவதற்கு வசதியாக ஒரு பிரிஸர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.30,000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3/2020/அ3

**தீர்மானம் எண்.2480 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.15

இந்நகராட்சி தனி அலுவலர் தீர்மானம் எண்.2305 நாள் 23.06.2020 தேதியில், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் குறித்தும், சுகாதார மேம்பாடு குறித்து பொது மக்களிடம் சுவர் விளம்பரம், பிளக்ஸ் போர்டு உள்ளிட்ட விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திட ரூ.1.00 இலட்சம் செலவு செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது திடக்கழிவுகளை முறையாக மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என பிரித்து வழங்குவது குறித்தும், குப்பைகளை ரோட்டில் வீசினால் அபராதம் விதிக்கப்படும் என்ற விழிப்புணர்வு பிளக்ஸ் அமைத்தட உத்தேச மதிப்பீடாக ரூ.10,000/-க்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) ஒரு சதுர அடிக்கு |
|---|---|---|
| 1. | Mahendran Arts, Colachel | ரூ.10/- |
| 2. | Vijay Flex works, Udayarvilai | ரூ.13/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.2-ஐ விட வரிசை எண்.1, Mahendran Arts, Colachel நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி அளித்த மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.1304/2017/எச்1

**தீர்மானம் எண்.2481 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.16

இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண்.TN 74 T 5508-க்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | 19000/- |
| 2 | மாதவா மோட்டார்ஸ், வெள்ளமடம் | 18500/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ஐ விட வரிசை எண்.2, மாதவா மோட்டார்ஸ், வெள்ளமடம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.2482 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.17

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் (ம) பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2383/2020 நாள் 04.02.2021-ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்: 2020-21-ன் கீழ், குளச்சல் நகராட்சி - திருவள்ளுவர் தெரு கால்நடை மருத்துவமனை அருகில் ரேஷன் கடை கட்டுதல் பணியினை ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும்.

மேற்காணும் நிர்வாக அனுமதியின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% அதிகம் (ரூ.5,04,398.35/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு (ரூ.5,03,527.35/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.09% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.415/2020/இ1

**தீர்மானம் எண்.2483 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.18

இந்நகராட்சி பொது சுகாதாரம் / குடிநீர் வினியோகம் / தெருவிளக்கு பராமரிப்பு பிரிவுகளில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள ரூ.3,68,000/- மதிப்பீட்டிலான பழைய பொருட்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25.02.2021 அன்று கோரப்பட்டதில், மேற்படி ஏலத்தில் கலந்துக் கொள்வதற்காக 12 நபர்காளல் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டது. மேற்படி இனத்திற்கான ஏலம் 25.02.2021 முற்பகல் 11.30 மணியளவில் வருகை புரிந்த 10 ஏலதாரர்கள் முன்னிலையில் நகராட்சி பொறியாளரால் நடத்தப்பட்டது. ஆனால் ஏலதாரர்கள் எவரும் ஏலக்கேள்வி கேட்க முன்வராத காரணத்தால், ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட தொகை ஏலதாரர்களுக்கு வாசித்து காண்பிக்கப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.J.கதிரேசன், எண்.252, இராமன்புதூர், நாகர்கோவில் | ரூ.4,11,999/- |
| 2. | M/s.GGS Traders, Thammathu Konam, Erumbukadu, Nagercoil | ரூ.4,45,999/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.GGS Traders, Thammathu Konam, நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி அதிகமானதாகும். எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று, ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு பழைய பொருட்களை வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.92-1/2021/இ1

**தீர்மானம் எண்.2484 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.19

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி 2019-2020 ஆம் ஆண்டிற்கு வட்டி கணக்கீடு செய்ய கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | Individual details (per employee) Rs. | Abstract details (per year) Rs. | Individual Receipt and Payment details (per employee) Rs. | Printout charges (per page) Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | M/s. RAJREV SOFT SYSTEM, CHENNAI -88 | 95.00 | 8700.00 | 95.00 | 6.00 |
| 2. | M/s. NTECH SOLUTIONS CHENNAI- 59 | 100.00 | 10500.00 | 100.00 | 6.50 |
| 3. | M/s.VENKAT EVENTS CHENNAI - 88 | 105.00 | 11000.00 | 105.00 | 7.00 |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s.RAJREV SOFT SYSTEM. CHENNAI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1099/2019/பி1

**தீர்மானம் எண்.2485 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.20

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட மற்றும் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் விவரப்படி உள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | வருடம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | M/s.R.J.Power | 2017-2018<br>2017-2018 | ரூ.1500/-<br>ரூ.668/- |
| 2. | M/s. EM Traders | 2011-12<br>2013-14 | ரூ.4000/-<br>ரூ.3000/- |

| | | | |
|---|---|---|---|
| 3. | M/s.J Electricals | 2016-17<br>2015-16<br>2016-17 | ரூ.7000/-<br>ரூ.7000/-<br>ரூ.7000/- |
| 4. | M/s.Enviran India | 2014-15<br>2013-14<br>2013-14<br>2014-15<br>2013-14<br>2013-14 | ரூ.10582/-<br>ரூ.14422/-<br>ரூ.10000/-<br>ரூ.2300/-<br>ரூ.2000/-<br>ரூ.3000/- |

ந.க.எண்.783/2019/பி1

**தீர்மானம் எண்.2486 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.21

இந்நகராட்சியின் வருவாய் மூலதனநிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளுக்கு 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு (Revised Budget) மற்றும் 2021-2022 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை (Budget) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.449/2018/பி1

**தீர்மானம் எண்.2487 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.22

இந்நகராட்சி 2021-2022-ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணணி பிரிவிற்கு தேவையான டோனர் உள்ளிட்ட பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.10,00,000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1347/2015/எச்1

**தீர்மானம் எண்.2488 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.23

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம், காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், அண்ணாசிலை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் துறைமுக பாலம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் ஆகியவற்றிற்கு ஆண்டு குத்தகை காலம் (Annual lease) 31.03.2021-ல் முடிவடைகிறது. எனவே மேற்படி குத்தகை இனங்களுக்கு 2021-2022 ஆம்

ஆண்டிற்கு குத்தகை தொகையில் 5% உயர்வு (GST, வருமானவரி, தொழில்வரி தவிர) கீழ்காணும் விபரப்படி குத்தகை செலுத்த மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | வருடம் | 5% உயர்வு செய்த குத்தகை தொகை | 2021-2022 ஆம் ஆண்டிற்கு5% உயர்வு செய்த பின்னர் குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் | P.கென்னடி | 75642/- | 3782/- | 79424/- |
| 2 | காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் | P.கென்னடி | 53390/- | 2670/- | 56060/- |
| 3 | அண்ணாசிலை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | R.ஐயப்பன் | 8820/- | 441/- | 9261/- |
| 4 | துறைமுகம் பாலம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | M.அஸ்ரப் | 10000/- | 500/- | 10500/- |

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்.2489 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.24

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526-ல் (ஈப்பு) பழுதுகள் ஏற்பட்டு, வாகனத்தை சீராக இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், கீழ்காணும் பழுதுகள் சரி செய்யப்பட வேண்டும் என ஓட்டுநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. Full Service and Grease works.
2. Changing of Engine oil, Oil filter and diesel filter.
3. Repairing of Air conditioner.
4. Changing of Hand break cable.
5. Four wheels grease packing and changing of lock nuts.
6. Changing of air filter.

7. changing of 21 Nos. Danger light.
8. Changing of 2 Nos. Wiper blade.
9. Bonnet rubber changing works.
10. Radiator over oiling and changing of cooling water.
11. Changing of Back lamp, bumper LED light
12. Changing of front grill.

எனவே நகராட்சி திட்டப்பணிகள், குடிநீர் வினியோகப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிகளை கண்காணிப்பதற்காக மேற்படி வாகனம் அதிகமாக பயன்படுத்தப்படுவதால், கண்காணிப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணியினை ரூ.45,000/- உத்தேச செலவினத்தில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண்.2490 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.25

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் 2021-ல் நடைபெற இருப்பதால், இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள அரசியல் கட்சிகளின் சுவர் விளம்பரங்களை பெயின்ட் மூலம் அழிப்பதற்கும், போஸ்டர்களை அகற்றுவதற்கும் உத்தேச செலவினம் ரூ.10,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.அ2/447/2019

**தீர்மானம் எண்.2491 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.26

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள தள்ளுவண்டிகள் (Push carts) பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால், நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள குறுகலான தெருக்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பொது சுகாதார நலன் கருதி, பழுதடைந்த நிலையில் உள்ள 10 எண்ணம் தள்ளுவண்டிகளின் முன்புறம், பின்புறம் மற்றும் அடிப்பகுதிகளில் MS Sheet-ஐ பயன்படுத்தி Welding செய்தல், சக்கர (Wheel) பகுதிகளை சரி செய்தல் மற்றும் வர்ணம் பூசுதல் (Full Painting) ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.68,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.277-1/2021/இ1

**தீர்மானம் எண்.2492 அனுமதிக்கப்படுகிறது**